# कूथनूर् श्री महा सरस्वथि अष्टकं

# கூத்தனூர் ஸ்ரீ சரஸ்வதி அஷ்டகம்

## Koothanur Sri Sarasawathi Ashtakam

ஆக்கியோன்: பி. ஸ்ரீதேவிப்ரசாத்

psdprasad.music@gmail.com

www.paattufactory.com

செப்டம்பர்: 2019

## ஸ்ரீ மஹா சரஸ்வதி துணை

அரசலாறு எழில்குவிக்கும் கூத்தனூரில் கோயில் கொண்ட ஸ்ரீ மஹா சரஸ்வதி அம்மன் - கலைகளின் அதிபதி - கல்வியின் நாயகி!

அந்த அம்பிகையின் மேல், புனையப்பட்டது இந்த அந்தாதி மாலை. எட்டு பாடல்களைக் கொண்டதால் "அஷ்டகம்" என்றும், முதல் பாடலின் முடிவு, அடுத்த பாடலின் தொடக்கமாக வரும்படி அமைந்துள்ளதால், "அந்தாதி" என்றும் கொள்ளலாம்.

கலைமகளின் புகழ்பாடி அருள் பெறுவோர்களுக்கு, எதிலும் வெற்றி, புத்தி சாதுர்யம், மற்றும் எல்லா கலை வளமும் கூடித் தங்கும் என்பதில் ஐயமில்லை !

சரஸ்வதி தேவியே சரணம் !

வணக்கங்களுடன்,

பி.ஸ்ரீதேவிபிரசாத்

www.paattufactory.com



www.paatt

1)

நற்கலைகள் தந்தருளும்

நிலமாளும் கலைவாணி !

அற்புதங்கள் படைப்பவளே !

அருள்பொங்கும் உன்மேனி!

சொற்றொடர்கள் அடிக்கிடினும்

சொல்லிடுமோ உன்னழகை?

பொற்பாதம் இரண்டையும்நான்

பற்றுகின்றேன் ! பற்றுகின்றேன் !

2)

பற்றுகின்றேன் தாயே ! நான்

பல்வளமும் பெற்றிடவே !

வெற்றிகளைக் குவித்திடுவாய் !

வெண்மைஉடை பூண்டவளே !

வீற்றிருக்கும் உன்கோலம்

வீணைகொண்ட கைகளையும்

சாற்றிடவே மொழிதேடி

தாயே! நான் அலைகின்றேன் !

www.paattufactory.com

3)

அலைகின்றேன் சரஸ்வதியே !
  அருள்வேண்டி நாள்தோறும் !
கலையெல்லாம் தந்திடுவாய் !
  கூத்தனூரில் உறைபவளே !
அலைமோதும் உளந்தனிலே
  அமைதியினைத் தந்திடுவாய் !
சிலையழகில் உனைக்கண்டேன் !
  சிலையானேன் கலைவாணி !

4)

கலைவாணி ! காப்பாய்நீ !
  அழைக்கின்றேன் ! வாவாநீ !
சிலைமேனி எழில்காணின்
  சீரழியும் வினையெல்லாம் !
மலைபோன்ற துயர்தீர்ப்பாய் !
  மாதேவி ! கலைவாணி !
நிலைகொள்ளா என்னெஞ்சை
  நிலையாக்க நீதுணையே !

www.paattufactory.com

5)

துணையாவாய் கலைமகளே !

துன்பமெலாம் துயர்படவே !

தினைப்பொழுதே உன்நினைவை

சிந்தையிலேத் தாங்கிடினும்

வினையெல்லாம் வினையுற்றே

விரைவினிலே நீங்கிவிடும் !

தனைநாடி வந்தோர்க்கு

துணையாகும் கூத்தனூராள் !

6)

கூத்தனூரில் உறைபவளே !

குறைகளையும் கலைமகளே !

கூத்தனவன் பாடலிலே

கூத்திட்ட செந்தமிழே !

பூத்திடுவாய் அகமலராய்

பண்ணிதனை இசைப்போர்பால்!

காத்திடுவாய் கலைவாணி !

காலமெலாம் நீசரணே !

www.paattufactory.com

7)

சரணடந்தேன் சரஸ்வதியே !

சகலகலா வல்லியே நீ !

அரசலாறு எழில்குவிக்க

அமர்ந்தாயே கூத்தனூரில் !

வரம்வேண்டிப் பாடுகிறோம்

வேண்டுவரம் அருள்தாயே !

கரம்குவித்து வேண்டுகிறோம்

அருள்வாயேக் கடைக்கண்ணால் !

8)

கண்களால்நீ அருட்பார்வை

கருணையுடன் சொரிந்திட்டால்

பண்களால்நான் மாலைகட்டி

சார்த்திடுவேன் ! கலைவாணி !

விண்கண்ட தெய்வம்பல

விளங்கிடினும், புவியினிலே

கண்கண்ட தெய்வமெனில்

கலைமகளே நீதானம்மா !

www.paattufactory.com